# 7

# தேவனுடைய அன்பிற்கு அடிமைகள்

## (2 கொரிந்தியர் 5:11-27)

*"ஆனபடியினாலே, ... நாங்கள் கிறிஸ்துவுக்காக ஸ்தானாபதிகளாயிருந்து, ..." (5:20).*

கொரிந்தியர்கள் பின்வரும் வார்த்தைகளை ஏற்கனவே கேள்விப்பட்டிருந்தனர்: "எல்லாருக்காகவும் ஒருவரே மரித்திருக்க" (5:14). உண்மையில் இவற்றைப் போன்ற வார்த்தைகள், இயேசு கிறிஸ்துவைப் பற்றிக் கொரிந்தியர்கள் கேள்விப்பட்ட முதல் வார்த்தைகளின் மத்தியில் இருந்தன (cf. 1 கொரிந்தியர் 15:3). பவுல் கொரிந்து நகருக்கு முதன்முறை வந்தபோது, அந்த எளிய செய்தியே அவர்களை இயேசு கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படியும்படி கொண்டு வந்திருந்தது. பவுல் தமது சுவிசேஷப் பயணங்களில் செல்லும் இடங்கள் எல்லா வற்றிலும், அவரது செய்தியின் பொருளடக்கம் ஒரேவிதமாகவே இருந்தது: "எல்லா ருக்காகவும் ஒருவரே மரித்திருக்கிறார்," அல்லது "நமது பாவங்களுக்காகக் கிறிஸ்து மரித்தார்." கிறிஸ்தவ வரலாறு அந்த வார்த்தைகளில் தொகுத்துரைக்கப்பட முடிந்தது.

கொரிந்தியர்கள் இந்த வார்த்தைகளை முன்பே பலமுறை கேள்விப்பட்டிருந்தனர் என்றால், 5:14ல் பவுல் இந்தத் தொகுப்புரைக்குத் திரும்புதல் பற்றிக் கவலைப்படுவது ஏன் என்று நாம் கேட்டாக வேண்டும். பவுல் தமது ஊழியத்திற்கான தமது தற்காத்தலின் மத்தியில் இருந்துள்ளார். 2:14-7:4 என்ற பகுதி முழுவதும், பவுல் கிறிஸ்துவின் உண்மையான ஊழியர் அல்ல என்று கூறிய விமர்சகர்களுக்கு எதிரான பவுலின் தற்காப்பு வாதத்தால் தொகுக்கப்பட்டுள்ளது. பின்பு திடீரென 5:14ல் பவுல், ஒவ்வொரு கிறிஸ்தவரும் மனப்பாடமாக அறிந்திருக்க வேண்டிய இவ்வார்த்தைகளை எறிகிறார்: "எல்லாருக்காகவும் ஒருவரே மரித்திருக்கிறார்" ஆனால் அவர் தமது செய்தியைக் கொரிந்தியர்களுக்கு நினைவூட்டுவதை நிறுத்தாதிருக்கிறார். 5:15-19ல் அவர் தமது செய்தியைப் புதிய வார்த்தைகளில் தரத் தொடங்குகிறார். 5:19ன், "தேவன் உலகத்தாருடைய பாவங்களை எண்ணாமல், கிறிஸ்துவுக்குள் அவர்களைத் தமக்கு ஒப்புரவாக்கி" என்ற வார்த்தைகள், புதிய ஏற்பாட்டிலெங்கும் கிறிஸ்தவ வரலாற்றைப்பற்றிக் கூறப்பட்டவற்றிலேயே மிகவும் வல்லமை நிறைந்த கூற்றாக இருக்கலாம். கொரிந்தியர்கள் ஒருவேளை இந்த வார்த்தைகளை மனப்பாடமாகக் கூட அறிந்து இருக்கலாம். அவற்றை சபைக்குழுமங்கள் ஆராதனையில் முறையாகத் திரும்பத் திரும்பக்கூறுதலை நாம் கற்பனை செய்யுமளவுக்கு, அவைகள் அவ்வளவு வல்லமையுடன் ஒலிக்கின்றன. கிறிஸ்தவர்கள், தாங்கள்

விசுவாசிப்பது என்ன என்று தொகுத்துரைக்குமாறு கேட்கப்பட்டதன்பேரில், ‘‘தேவன் உலகத்தாருடைய பாவங்களை எண்ணாமல், கிறிஸ்துவுக்குள் அவர்களைத் தமக்கு ஒப்புரவாக்கினார்’’ என்றோ அல்லது ‘‘நமது பாவங்களுக்காகக் கிறிஸ்து மரித்தார்’’ என்றோ கூறவதை நாம் கற்பனை செய்ய முடியும். ஒருவேளை அவர்கள் 5:21ன் வார்த்தைகளைக் கொண்டு பதில் அளித்திருப்பார்கள்: “நாம் அவருக்குள் தேவனுடைய நீதியாகும்படிக்கு, பாவம் அறியாத அவரை நமக்காகப் பாவமாக்கினார்.” உண்மைக் கிறிஸ்தவர்களாக இருப்பவர்கள் யார் என்று மற்றவர்கள் வாதம் செய்ய விரும்புகின்றனர், மற்றும் பவுல் தமது மிகக்கனத்த யுத்தத்தளவாடங்களை திரும்ப வீசுகிறார் என்பதே நாம் பெறும் மனப்பதிவாக உள்ளது.

## நீங்கள் பதில் அளிக்கும்படியாக (5:11, 12)

‘‘உண்மைக் கிறிஸ்தவராக இருப்பவர் யார்?’’ என்ற கேள்விக்கு, விசுவாசத்தின் இந்தத் தொகுப்புரைகள் என்ன செய்கின்றன? கிறிஸ்தவ விசுவாசம் என்றால் என்னவாக இருந்தது என்பதற்கு, மற்றவர்கள் தங்கள் சொந்தக் கருத்துடன் வந்திருந்தபடியால், கொரிந்தியர்கள் திகைப்பு அடைந்திருந்தனர். அவர்கள், கிறிஸ்துவின் உண்மையான ஊழியக்காரர்கள் என்று உரிமைகோரியவர்களின் எதிர் உரிமைகோருதல்களைக் கேள்விப்பட்டபின்பு, எதை நம்புவது என்று அறியாத நிலையில் விடப்பட்டிருந்தனர். சிலர் மற்றவர்களுக்கெதிராகத் “தங்களைத் தாங்களே அளந்து” (10:12) மற்றும் பிறரது வெளித்தோற்றத்தின்படி அவர்களை நியாயந்தீர்க்கின்றனர் (5:12). அவர்கள், ஆவியானவரின் வரங்களைக் கொண்டுள்ளதாக உரிமைகோருகின்றனர், மற்றும் வல்லமையின் காணக்கூடிய வெளிப்பாடுகளினால் கிறிஸ்துவின் உண்மையான ஊழியக்காரர்கள், அடையாளப்படுத்தப்பட்டிருக்க வேண்டும் என்று வாதிக்கின்றனர். பவுலைப் போன்று மனதை ஈர்க்கலாகாத ஒரு மனிதர் ஆவியானவரைக் கொண்டிருத்தல் சாத்தியமல்ல, ஏனெனில் காட்சிப்படுத்த அவரிடம் வல்லமை எதுவும் இல்லை! பவுல் ஒரு “உலகப்பிரகாரமான” அல்லது “ஆவியில்லாத” மனிதராக இருந்தார் என்ற தமக்கெதிரான குற்றச்சாட்டை எதிர்த்துத் தற்காப்பு வாதம் செய்யவேண்டியிருந்தது (1:17; 5:16; 10:3, 4).

பவுல், தமது சொந்த கனத்திற்காகத் தமது விமர்சகர்களுக்கு எதிராகத் தம்மைத் தற்காத்துக் கொள்வதில்லை. கொரிந்தியர்களுக்குச் சிலபதில்கள் கொடுக்கப்படவில்லை என்றால் அவர்கள் தங்கள் இலக்கைச் சுலபமாக இழந்துவிடுவார்கள் என்று அவர் காண்கிறார். சபை முழுவதும், “தேவனுக்கு முன்பாக வெளியரங்கமாயிருக்கிறோம்’’ என்று புரிந்துகொள்வதும் தகவல் அளிக்கப்பட்டு இருத்தலும் அவசியமாகிறது, ‘‘உங்கள் மனச்சாட்சிக்கும் வெளியரங்கமாயிருக்கிறோம் என்று நம்புகிறேன்’’ என்று பவுல் கூறுகிறார் (5:11). பின்பு அவர், “இதனாலே நாங்கள் உங்களுக்கு முன்பாக எங்களை மறுபடியும் மெச்சிக்கொள்ளாமல், இருதயத்திலல்ல, வெளிவேஷத்தில் மேன்மை பாராட்டுகிறவர்களுக்கு எதிரே எங்களைக்குறித்து நீங்கள் மேன்மை பாராட்டும்படிக்கு ஏதுவுண்டாக்குகிறோம்’’ என்று கூடுதலாகக் கூறுகிறார் (5:12). தகவல் அளிக்கப்பட்டிராத சபையானது கிறிஸ்தவ விசுவாசத்திற்குப் போட்டியிடும் பதிப்புகளுக்கு எதிராகத் தற்காப்பற்றதாக இருக்கும்! பதில்கள் இல்லாத நிலையில் கிறிஸ்தவர்கள், கிறிஸ்தவரின் அடையாளம் என்ன என்று

அறிவதில்லை.

தீவிரமான கேள்விகளுக்குத் தீர்வுக்கான மாதிரிகளில் பவுல் அளிக்கிற இதைக் காட்டிலும் பெரியதொன்றும் சபையில் இருப்பதில்லை. "எல்லாருக்காகவும் ஒருவரே மரித்திருக்கிறார்" என்ற வார்த்தைகளைக் கொரிந்து சபையார் பல முறை கேள்விப்பட்டிருந்தபோதிலும், அத்தியாவசியமான செய்தியை அவர்கள் திரும்பவும் கேள்விப்படுதல் அவசியமாயிருந்தது. வழக்காடப்பட்ட ஒரு கருத்திற்குப் பவுல் பதில் அளிக்கும் முறைமையானது நமக்கு வினோத மானதாகக் காணப்படலாம். நாம் நடைமுறையான மக்களாக இருக்கிறோம், மற்றும் நாம் "உண்மை" என்ன என்பதைக் காட்டிலும், எது "பணிக்குதவும்" அல்லது விளைவுகளைச் சாதிக்கும் என்பதில் அதிகம் ஆர்வம் உள்ளவர்களாக இருக்கலாம். மேலும் பழைய செய்தியானது இற்றுப்போனதாகவும் திரும் பக்கூறத் தகுதியற்றதாகவும் உள்ளது என்று சுலபமாக முடிவுசெய்யுமளவுக்கு, புதிய கருத்துக்களை நாம் நேசிக்கிறோம். ஆனால் கிறிஸ்தவரின் அடையாளம் என்ன என்று தீர்மானிக்க, ஒரே ஒரு தர அளவையாக இருப்பது பழைய செய்தி மாத்திரமே என்ற காரணத்தால், ஒரு நெருக்கடியான கணத்தில் பவுல் அதைக் கொண்டுவருகிறார். எல்லாருக்காகவும் மரித்த ஒருவருடைய வரலாறுதான் யுத்தத்திற்கான நமது [ஆயுத] அளிப்பாக உள்ளது.

ரிச்சர்டு நியூஹாஸ் என்பவர் ஊழியத்திற்கான சுயாதீனம் என்ற புத்தகத்தில், "அமெரிக்காவில் உள்ள 3,000க்கும் மேற்பட்ட உள்ளூர் சபைகளில், ஊழியத் தின் நடைமுறையில் ஏறக்குறைய எந்த விஷயமும் காணப்படமுடியும்" என்று எழுதினார்.[1] ஊழியத்தின் மாறுபட்ட எல்லாப் பாணிகளுடனும், தேவனுடைய மக்களுக்குச் சிலதிட்டங்கள் தகுதியானவையாகவும் சில திட்டங்கள் தகுதி யற்றவையாகவும் உள்ளன என்பது தெளிவாக இருக்கிறது. சபை நடத்துனர்கள் பல மாற்றுத் திட்டங்களைக் கண்ணோக்கும்போது, கிறிஸ்துவின் நோக்கத் திற்கு உண்மையிலேயே பணியாற்றுவது எது என்பதை அவர்கள் எவ்வாறு தீர்மானிக்கின்றனர்? குடும்ப வாழ்வுத் திட்டத்தைத் தொடங்குவதா, ஒரு புதிய வசதியைக் கட்டியெழுப்புவதா அல்லது இடர்ப்பாட்டில் உள்ள மக்களுக்கு ஆலோசனை அளிப்பதா என்பதைத் தீர்மானிக்க வழியெதுவும் உள்ளதா? அடிப்படை வரலாற்றில் ஆதாரமூலம் இல்லாத சபை, இலக்கைக் கொண்டிருப்பதில்லை.

## வரலாறு நமது வரலாறாக உள்ளது (5:13-15)

கிறிஸ்தவரின் அடையாளம் என்பது, சரியான வார்த்தைகளைக் கூறுதலில் மாத்திரம் இருப்பதில்லை, ஏனெனில் சரியான வார்த்தைகளும்கூட அர்த்த மற்ற சொற்றொடர்கள் ஆகிவிடக்கூடும். 5:13, 14ல் பவுல், "எல்லாருக்காகவும் ஒருவரே மரித்திருக்க" என்ற வார்த்தைகள் தமக்கு அர்த்தமற்றவையாக இருந்ததில்லை என்று காண்பிக்கிறார். அவரது புறத்தோற்றத்தினால் அவரை, மனதை ஈர்க்காதவர் என்று கருதியவர்களை, அவரது ஊழியம் ஏன் திருப் திப்படுத்தவில்லை என்று விளக்குவதற்கு அவர் விரும்பியபோது, அவர் தமது வாழ்வில், "எல்லாருக்காகவும் ஒருவரே மரித்திருக்கிறார்" என்ற வார்த்தைகள் ஏற்படுத்திய செயல்தாக்கத்தை நினைவுகூர்ந்தார். பவுல், "நாங்கள் பைத்தியங்கொண்டவர்களென்றால் தேவனுக்காக அப்படியிருக்கும்; தெளிந்தபுத்தியுள்ளவர்களென்றால் உங்களுக்காக அப்படியிருக்கும்"

(5:13) என்று பவுல் கூறுகிறபோது, அவரது ஊழியத்தைத் தீர்மானித்த கொள்கைகள் பற்றிய மனப்பதிவு ஒன்றை நாம் பெறுகிறோம். ஒருவேளை, மற்றவர்கள் பவுலை "ஆரோக்கியமான சிந்தையுள்ளவர்" (KJV வேதாகமத்தில் "தெளிந்த புத்தி" என்றுள்ளது) மற்றும் போதிய அளவு "பரவசநிலை" உடையவரல்ல என்று கூறியிருந்த கொள்கைகளை உரைத்திருக்கலாம். "பைத்தியங்கொண்டவர்கள்" என்பதற்கான வார்த்தையானது நேரடி அர்த்தத்தில் "பரவசநிலை" (*exestemen*) (பரவசநிலையுடைய மனிதர்கள்) என்பதாக உள்ளது. பவுல், "நான் பரவசநிலையிலிருந்தால், இந்தப் பரவசநிலை எனக்கும் தேவனுக்கும் இடையிலானதாக உள்ளது. என்னையே நான் மேம்படுத்திக்கொள்வதற்காக மற்றவர்களுக்கு முன்பாக நான் எனது சாதனைகளை அணிவகுக்கச் செய்வதில்லை." என்று பதில் அளிக்கிறார். பவுல் "முதன்மையானவராக இருக்க வேண்டும் என்பதை தேடுவதில்லை." அவரது ஊழியம் "தேவனுக்காகவும் மற்றவர்களுக்காகவும்" உள்ளது. சுயநலம் மற்றும் தன்முனைப்பு ஆகியவற்றைப் புறக்கணித்தல் என்பது தேவனுடைய ஊழியக்காரரின் அடையாளமாக உள்ளது.

பவுல் தமது மற்றும் நமது கலாச்சாரத்தின் தர அளவையைப் புறக்கணிக்கும்படி அவரை ஏற்படுத்தியது எதுவாக இருக்கக்கூடும்? 5:14ல் அவர் இதற்குப் பதில் அளிக்கிறார்: "கிறிஸ்துவினுடைய அன்பு எங்களை நெருக்கி ஏவுகிறது." "நெருக்கி ஏவுகிறது" (*synechei*) என்ற வார்த்தை, கவனத்தை ஈர்க்கக்கூடியதாக உள்ளது. அது "கவனிப்புக்குள் எடுத்துக்கொள்ளுதல்" அல்லது "செயலாற்றக் கட்டாயப்படுத்துதல்" என்று அர்த்தப்பட்டது. அது மேலான அதிகாரம் உள்ளவரால், ஒரு கைதி பாதுகாக்கப்படுதலுக்கான வார்த்தையாக இருந்தது. பவுல், கிறிஸ்துவின் அன்பினால் "பிடிக்கப்பட்டு" மற்றும் "காவலில் வைக்கப்பட்டு" இருந்துள்ளார். இந்த அன்பினால் அவர் மூழ்கடிக்கப்பட்டதால், மற்றவர்களிலிருந்து மாறுபட்ட வகையில் அவர் காணப்பட்டு செயல்படுகிறார். அந்த சுயநலமற்ற அன்பு அவரை இப்போது கட்டுப்படுத்துவதால், அவர் அந்த அன்பின் வெளிப்பாடாகச் செயல்படுகிறார்.

மூழ்கடிக்கும் இந்த அன்பைப்பற்றிப் பவுல் வேறொரு இடத்தில் பின்வருமாறு பேசுகிறார்: "நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, தேவன் நம்மேல்வைத்த தமது அன்பை விளங்கப்பண்ணுகிறார்" (ரோமர் 5:8). "கிறிஸ்துவின் அன்பைவிட்டு நம்மைப் பிரிப்பவன் யார்?" என்று கேட்கிறார் (ரோமர் 8:36). அவர் அன்புகூரப்பட்டிருந்ததால் சொந்த வகையில் இருதயம் அசைக்கப்பட்டார். அந்த உண்மையானது அவரது ஊழியத்தை வடிவமைத்தது.

பவுல், தம்மைக் கட்டுப்படுத்தியிருந்த அன்பை நினைவுகூரும்போது, அவர் சிலுவையைப் பற்றி நினைத்தார். ஏன் என்பதை இப்போது நாம் புரிந்துகொள்கிறோம். தேவனுடைய உண்மையான மற்றும் கள்ள ஊழியர்கள் பற்றிய கலந்துரையாடல் ஒன்றில் அவர் "எல்லாருக்காகவும் ஒருவரே மரித்திருக்க" என்ற பழைய வார்த்தைகளை மேற்கோள் காண்பிக்கிறார். இந்தச் சொற்றொடர் ஒரு அர்த்தமற்ற புளித்துப்போன சொற்றொடராக இருப்பதில்லை. சுயத்தை மையமாகக் கொண்ட தர அளவையைக் கிறிஸ்து புறக்கணித்திருந்தபோது, கிறிஸ்தவமானது சுயநலமற்ற அன்பின் செயல்பாடு கொண்டு தொடங்கியது என்பதை அவர், ஒவ்வொரு நாளும் நினைவுகூர்ந்தார். விசுவாசத்

*தின் மையமாக, "க்காக" ("for") என்ற எளிய வார்த்தை விளங்குகிறது. அவர் நமது பாவங்களு "க்காக" (1 கொரிந்தியர் 15:3) மற்றும் "அக்கிரமக்காரருக்காக" (ரோமர் 5:6) மரித்தார்.*

*இயேசு சுயநலமற்ற ஒருவராக இருந்தார் என்றால், கிறிஸ்தவரின் அடையாளம் என்னவாக உள்ளது? பவுல், "... எல்லாருக்காகவும் ஒருவரே மரித்திருக்க, எல்லாரும் மரித்தார்கள் என்றும்; பிழைத்திருக்கிறவர்கள் இனித் தங்களுக்கென்று பிழைத்திராமல், தங்களுக்காக மரித்து எழுந்தவருக்கென்று பிழைத்திருக்கும்படி, அவர் எல்லாருக்காவும் மரித்தாரென்று நிதானிக்கிறோம்" என்று பதில் அளிக்கிறார் (5:14, 15). கிறிஸ்தவர் இனியும் தமது சுய சாதனைகள், நற்பெயர்கள் அல்லது புகழ்ச்சியில் முன்னீடுபாடு கொண்டிருப்பதில்லை என்பது கிறிஸ்தவரின் அடையாளமாக உள்ளது. கிறிஸ்துவுக்கு உரியவர்கள், மற்றவர்களுக்காக வாழத் தாங்கள் கொண்டுள்ள மனவிருப்பத்தினால் தனிச்சிறப்பாகக் குறிக்கப்படுகின்றனர்.*

*பவுல் கொரிந்தியர்களுடன் நடத்திய உரையாடலை நாம் "ஒட்டுக்கேட்டால்," நமது முன்னுரிமைகளைத் தீர்மானிக்கும் வழியைப் பற்றிய புதிய கேள்விகளை நாம் எழுப்புவோம். நமது இலக்கைக் கண்டறிவதற்கு நாம், "எல்லாருக்காகவும் ஒருவரே மரித்திருக்க" என்ற அடிப்படை வார்த்தைகளிடத் திற்கு எவ்வளவு அடிக்கடி திரும்புகிறோம்? "இனியும் தங்களுக்காக வாழாதிருக்கும்" தனிச்சிறப்பைக் கொண்ட நடத்துனர்களை நாம் தேர்ந்துகொள்கிறோமா? கொரிந்தியர்களைப்போல நாம், மனதை ஈர்க்கும் தோற்றம் ஒன்றைக் கொண்டுள்ள அணுகுமுறைகளினால் சோதிக்கப்பட்டு இருக்கிறோம். காணக்கூடிய வெற்றி என்பதே சிலருக்கு நம்பத்தகுந்த சபையின் அடையாளமாக உள்ளது. "நம்மை வரைபடத்தில் இடுகிற" ஊழியங்களை நாம் தேர்ந்து கொள்ளலாம். இருப்பினும் நாம், நமது இலக்குகளைக் கண்டறிய, இயேசுவின் உதாரணத்திற்குத் திரும்பத் தொடர்ந்தால், நாம் அவரது வழியினால் "அடிமைகளாகப் பிடிக்கப்" பட்டிருப்போம். வெர்னர் எல்லர் என்பவர், நாம் வெற்றி நிறைந்தவர்களாக இருப்பதற்கல்ல, ஆனால் விசுவாசம் நிறைந்தவர்களாக இருப்பதற்கே கிறிஸ்து நம்மை அழைக்கிறார் என்று சரியாகவே கூறியுள்ளார்.[2]*

## *தேவனுடைய புதிய உலகம் (5:16, 17)*

*நமது விசுவாசத்தின் மையக்கூற்றுகள் நமது வாழ்வில் ஒரு செயல்தாக்கத்தைக் கொண்டுள்ளன என்பதைப் புரிந்து உணராமலேயே அவற்றை வாரத்திற் குப் பின் வாரம்தோறும் திரும்பத் திரும்ப உரைப்பதற்கான சாத்தியக்கூறு எப்போதுமே நிலவுகிறது. ஒரு நாள் மாலை ஆராதனை வேளையில் ஒரு ஊழியக்காரரின் பிரசங்கம், கூட்டத்தில் இருந்த ஒருவரின் "எனவே என்ன?" என்று கேட்ட கேள்வியால் இடைமறிக்கப்பட்டதை நான் நினைவுகூருகிறேன். அந்தக் கேள்வியானது ஊழியக்காரருக்கும் கூட்டத்தாருக்கும் சங்கடம் விளைவித்தது, அது அந்தக் காட்சிமைவிற்குப் பொருத்தமற்றதாக இருந்தது. ஆனால் அந்த நிகழ்ச்சியானது, பழையவரலாற்றிற்கு ஒரு "எனவே என்ன?" என்பது உள்ளது என்பதை எனக்கு நினைவுபடுத்தியது, ஏனெனில் அது நமது வாழ்வில் ஒரு வேறுபாட்டை ஏற்படுத்துகிறது. நமது ஊழியங்கள், சிலுவையின் வரலாற்றினால் செயல் விளைவு ஏற்படுத்தாம லேயே, "வழக்கம்போல" தொடர்ந்து போய்க்கொண்டிருக்கக்கூடும்.*

*5:16, 17ல் பவுலின் "ஆகையால்" என்பது அவர் "எல்லாருக்காவும் ஒருவரே மரித்திருக்க" என்பதைத் திரும்பக் கூறுவதுடன் திருப்தியடைய வில்லை என்பதைக் காண்பிக்கிறது. 5:16, 17ல் உள்ள இரு இணைவாக்கியங்கள் காண்பிக்கிறபடி, அந்த வரலாறு அவரது ஊழியத்தில் ஒரு வேறுபாட்டை ஏற்படுத்தியுள்ளது.*

*சிலுவையில் அறையப்படுதல் - மனிதத்தர அளவையின்படி மதியீனமானதாக இருந்த அந்த நிகழ்ச்சி - பவுலுக்கு உலகத்தைக் கண்ணோக்குவதற்கு முற்றிலும் புதிய வழியொன்றைக் கொடுத்துள்ளது என்பதே 5:16, 17ன் கருத்தாக உள்ளது. "இதுமுதற்கொண்டு" என்பது, அவரை மாற்றியுள்ள, கிறிஸ்துவுக்குள்ளான அனுபவத்தைக் குறிக்கிறது. இனியும் அவர் எவரொருவரையும், "மனிதக் கண்ணோகிலிருந்து" (kata sarka;* NEB, *"உலகப்பிரகாரமான தர அளவைகளில்") "கருத" (அல்லது "அறிய") மாட்டார். சிலுவை என்பது உலகப்பிரகாரமான தர அளவைகளின் முடிவை அர்த்தப்படுத்துகிறது, ஏனெனில் உலகத்தையும் இயேசு கிறிஸ்துவையும் கண்ணோக்குவதற்கு முற்றிலும் புதியதான ஒரு வழி உள்ளது. இந்தக் கருத்து 5:17ல் வலிவார்ந்த வகையில் கொண்டுவரப்பட்டது. 5:17ஐ* NEB, *வேதாகமம், "எவரொருவரும் கிறிஸ்துவில் ஒன்றிணைக்கப் பட்டிருக்கையில், முற்றிலும் புதிய ஒரு உலகம் உள்ளது" என்று மொழி பெயர்க்கிறது.* RSV *வேதாகமம் தரவழைக்கும் வகையில், கிறிஸ்துவுக்குள் ஒன்றிணைக்கப்பட்ட ஒருவர் "ஒரு புதிய சிருஷ்டியாக இருக்கிறார்" என்பது மெய்யாகவே உள்ளது. ஆனால் கிரேக்க வசனமானது, கிறிஸ்தவர் இந்த உலகத்தைப் புதியதொரு வழியில் கண்ணோக்குவதால், கிறிஸ்தவருக்கு "ஒரு புதிய உலகம் உள்ளது" என்று மிகச்சுலபமாகத் தரவழைக்கப்பட இயலும். ஒருகாலத்தில் முக்கியமானவையாக இருந்த தர அளவைகள், முன்னுரிமை யான விஷயங்களாக இல்லாது ஒழிந்துள்ளன. ஒருகாலத்தில் அர்த்தம் ஒன்றும் இராதிருந்த மதிப்புகள் திடீரென்று அர்த்தம் நிறைந்தவை ஆயின. மதிப்புகளில் ஏற்பட்ட இந்த மாற்றமானது, ஒரு சிலுவையில் மரித்த தற்காப்பற்ற ஒரு மனிதரின் வரலாற்றில் இருந்து வளர்ந்துள்ளது. அந்த வரலாறு எனக்குச் சிலவற்றை அர்த்தப்படுத்துவதால், "இதுமுதற்கொண்டு" நான் தேவனுடைய தர அளவையின்படி ஊழியங்களை மதிப்பிடுவேன்.*

*கிறிஸ்துவுக்குள் பவுலின் புதிய "கண்ணோட்டத்தின் கருத்து" என்பது, இன்றைய நாட்களில் சபை வாழ்வில் தீவிரமான பிரச்சனைகளை எழுப்புகிறது. எந்த ஊழியங்கள் முன்னுரிமை கொண்டவை என்று தீர்மானிப்பதில் நாம் நிச்சயமற்றவர்களாக நிலைத்திருக்கும் காலத்தில், நமது திட்டங்கள், பவுலின் எதிராளிகளுடைய "மனிதக் கண்ணோட்டக் கருத்தை" பிரதிபலிக்கின்றனவா அல்லது சிலுவையின் "புதிய உலகத்தை" பிரதிபலிக்கின்றனவா என்று நம்மையே கேட்டுக்கொள்வது ஏற்புடையதாக இருக்கிறது. மற்றும் வெற்றிகரமான ஒரு ஊழியத்தைத் தீர்மானிப்பது எது? "மனிதக் கண்ணோட்டக் கருத்தின்" படி, பவுல் "உற்பத்தியற்ற" பல ஊழியங்களில் "தமது நேரத்தை வீணாக்கி இருந்தார்." நமது வெற்றியை நாம் சில வகையில் "எண்ணிக்கையின் நியமத்தின்படி" அளக்க முடியும் என்பதுபோல், எல்லா ஊழியங்களையும் "எண்ணிக்கைகள்" கொண்டு மதிப்பிடுதல் ஏற்புடையதாக உள்ளதா? "புதிய உலக" கண்ணோட்டக் கருத்தின் படி, வெற்றி என்பது, பள்ளிகளில் செய்யப்படுவதுபோல, அல்லது நிறுவனத் தின் இலாப நஷ்டப் பத்திகளில் நின்றிருப்பதுபோல, எண்ணிக்கை மதிப்பின்*

*வகையினால் ஒருக்காலும் அளக்கப்படுவதாயிராது,*

*புதிய "கண்ணோட்டக் கருத்திற்கு" இணக்கமாக உள்ள பல முக்கியமான திட்டங்கள் ஒருக்காலும் வெளியிடப்படுவதில்லை என்று நான் நம்பியிணங்குகிறேன். அவைகள் அடிக்கடி, விளைவுகள் மனதை ஈர்க்கக்கூடியதாக இல்லாதிருக்கும் கடினமான சூழ்நிலைகளில் செயல்படுத்தப்படுகின்றன. ஆனால் அவைகள், மற்றவர்களுக்காகத் தங்களையே அர்ப்பணித்துள்ள மக்களால் செயல்படுத்தப்படுகின்றன. ஏற்றுக்கொள்வார் இல்லாத களங்களில் பல பத்தாண்டுகள் ஊழியம் செய்த சுவிசேஷ ஊழியர்களையும், மாறி வரும் அயலகத்தில் சபையை விட்டுக்கொடுக்க மறுக்கும் குடும்பங்களையும் நான் நினைவுகூருகிறேன். இந்த மக்களில் பலர், தங்கள் செயல்விளைவுத் தன்மையைச் செயல்விளக்கப்படுத்த மனதை ஈர்க்கும் புள்ளிவிபரம் எதையும் கொண்டிருந்ததில்லை. மனிதத் தர அளவையின்படி அவர்களை அளந்த எவரும் தோல்வியை மாத்திரமே [அவர்களில்] கண்டனர். ஆனால் இந்த மக்கள், வெற்றியின் அளவீடு என்ற வகையில் "மனிதக் கண்ணோட்டக் கருத்தில்" பிடிபட்டிருக்க மறுத்தனர்.*

## *இது யாருடைய ஊழியமாக உள்ளது (5:18-21)*

*நமது இயல்பான தன்முனைப்பானது, "மனிதக் கண்ணோட்டக் கருத்தின் படி" வாழ்வதற்கு நம்மைச் சோதிக்கிறது.* நம்மை *மேம்படுத்தக்கூடிய மற்றும் நமது சாதனைகளில் பெருமையடிக்க நமக்குக் காரணத்தைத் தரும் திட்டங்களைக் கண்ணோக்கும்படி நாம் சோதிக்கப்படுகிறோம். மேலும் நாம், வெற்றிக்கு மாபெரும் வாய்ப்புவளத்தைப் பெற்றிராத சட்டப்பூர்வமான ஊழியங்களைத் தவிர்க்கும்படியாகவும் சோதிக்கப்படுகிறோம். "மாபெரும் சபையைக்" கொண்டிருக்க வேண்டும் அல்லது "மிகவும் பெருமைவாய்ந்த" சபைக்கு ஊழியம் செய்ய வேண்டும் என்ற நமது விருப்பத்தின் இயல்பான தன்முனைப்பு இடர்ப்பாட்டில் உள்ளதாகும். சிறப்பாக, நாம் நமது சொந்தத் தன்முனைப்புகளில் பிடிபட்டிருக்கும்போது, கேள்வியெழுப்ப நேரம் ஒன்றுள்ளது: இது யாருடைய ஊழியமாக உள்ளது?*

*இந்தக் கேள்விக்குப் பவுல், 5:18, 19ல் பதில் அளிக்கிறார். "இவையெல்லாம் தேவனாலே உண்டாயிருக்கிறது" என்ற உண்மையில் வலியுறுத்தம் உள்ளது. இது "தேவனிடத்தில் இருந்து" வந்துள்ளது என்பதை நமக்கு நினைவூட்டுவதற்காக, 5:14ல் செய்தது போன்றே, அவர் 18 மற்றும் 19ம் வசனங்களில், கிறிஸ்தவ வரலாற்றைத் தொகுத்துரைக்கிறார். இரு இணைவசனங்களில் அவர், கிறிஸ்துவின் மூலமாய் (5:18) மற்றும் கிறிஸ்துவுக்குள் (5:19), தேவன் "நம்மைத் தம்முடன் ஒப்புரவாக்கினார்" என்று கூறுகிறார். அதாவது, தேவனுடைய முயற்சியால் வரலாறு துவங்கிற்று.நம்மை அவருடன் மீளக்கட்டுவிக்க நாம் ஒன்றும் செய்யவில்லை.*

*சிலுவையின் வரலாற்றைப் பவுல் கூறியபோது, தேவன் என்ன செய்திருந்தார் என்பதை அறிவிக்க, பவுல் மிக அரிதாகவே பயன்படுத்தும் உருவகமான, கவனத்தை ஈர்க்கும் ஒரு உருவகத்தைப் பயன்படுத்தினார். சிலுவையில் தேவன் நம்மைத் தமக்குள் "ஒப்புரவாக்கினார்." இவ்வார்த்தையானது, அறியப்பட்டிருந்த ஒரு காலகட்டத்திற்குப் பின்பு சமாதானமும் இசைவிணக்கமும் மீளக்கட்டுவிக்கப்பட்டது என்பதை மறைமுகமாய் உணர்த்துகிறது (cf. 1 கொரிந்தி*

யர் 7:11). இவ்வார்த்தை நமக்கு, தெருவில் பொதுவாகத் தரப்படுகிறதான *ஷாலோம்* என்ற எபிரெய வாழ்த்துதலை நினைவூட்டுகிறது. இவ்வார்த்தை "சமாதானம்" என்பதை அர்த்தப்படுத்தியது, ஆனால் அது வெறுப்புணர்வு இல்லாத நிலை என்பதைக் காட்டிலும் அதிகமானவற்றை அர்த்தப்படுத்தியது. இது, இசைவிணக்கம் மற்றும் முழுமைத்தன்மை ஆகியவற்றின் அனுபவத்தை மறைமுகமாய் உணர்த்திற்று. சுதந்திரமாய்ச் செயலாற்றும் நமது திறன்மூலம் செய்ய முடிந்திராதவற்றைத் தேவன் கிறிஸ்துவின் மூலமாகச் செயல்படுத்தினார்: அவர் நம்மை *ஷாலோமுக்கு* ஒப்புரவாக்கினார். பவுல் ரோமர் 5:1ல் கூறுவது போல, "நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துமூலமாய் தேவனிடத்தில் சமாதானம் பெற்றிருக்கிறோம்." "சத்துருக்களாக" இருந்த பின்பு நாம், "அவருடைய [தேவனுடைய] குமாரனின் மரணத்தினாலே அவருடனே [தேவனுடனே] ஒப்புரவாக்கப்பட்டோம்" (ரோமர் 5:10). இது, முன்பு கூறப்பட்டதை [திரும்பக்] கூறும் மாறுபட்ட வழியாக இருந்தது (5:14): "எல்லாருக்காகவும் ஒருவரே மரித்திருக்கிறார்." இது நம்முடையதல்ல ஆனால் தேவனுடைய வரலாறாக உள்ளது.

ஆனால் மற்றவர்கள் இந்த வரலாற்றை எவ்வாறு அறிய வேண்டியுள்ளது? 5:18-20ல், பவுல் ("தேவன் நம்மை ஒப்புரவாக்கினார்" என்ற) இந்த வரலாற்றைத் தொகுத்துரைக்கும் ஒவ்வொரு வேளையிலும், தேவன் இந்த வரலாற்றை யாரிடம் ஒப்புவித்திருந்தார் என்பதையும் குறிப்பிடுகிறார். தேவன் நம்மை ஒப்புரவாக்கியுள்ளார் என்றால், நாம் "ஒப்புரவாக்குதலின் ஊழியத்தை" மேற்கொள்கிறோம் (5:18). 5:18ன்படி நமது ஊழியமானது ஒரு *கொடையாக* உள்ளது ("ஒப்புரவாக்குதலின் ஊழியத்தை எங்களுக்கு ஒப்புக்கொடுத்தார்"). 5:19ன்படி, இது "ஒரு ஒப்புவிப்பாக/நம்பிக்கைவைத்தல் என்பதாக" உள்ளது. நாம் விரும்புகிறபடி செய்ய, இது நமது ஊழியமாக இருப்பதில்லை. திட்டங்கள் நமது திட்டங்களாக இருப்பதில்லை. சட்டப்பூர்வமான திட்டங்கள் ஒருக்காலும் ஒன்றுடன் ஒன்று போட்டியிடுவதில்லை. உண்மையான ஒவ்வொரு ஊழியமும் "ஒப்புரவாக்குதலின் ஊழியமாக" இருப்பதையே நோக்கங்கொண்டுள்ளது.

நவீன ஊழியங்கள் இலக்கு மற்றும் விளக்கம் ஆகியவற்றில் குறைவுபடுவதால், அவைகள் அடிக்கடி தோல்வியடைகின்றன. இப்படிப்பட்ட இலக்கு எதிலும் பவுல் குறைவுபடவில்லை. "ஒப்புரவாக்குதலின் ஊழியம்" என்ற வகையில் அவரது ஊழியமானது விளக்கத்தில் குறைவுபட்டிருக்கவில்லை. அவரது ஊழியத்தின் ஒவ்வொரு செயலும் ஒவ்வொரு அம்சமும், தேவனுக்கும் மனிதருக்கும் இடையில், *ஷாலோமை* அல்லது ஒப்புரவாக்குதலைக் கொண்டுவருவதை இலக்காகக் கொண்டிருந்தது. அவர் கிறிஸ்துவின் "ஸ்தானாபதி"யாக இருக்கிறார் (5:20). ஊழியத்திற்கான மற்ற சில சொற்றொடர்களை (அதாவது, "அடிமை," 4:5; "ஊழியக்காரன்," 6:4 என்பவற்றை)ப் போலின்றி, "ஸ்தானாபதி" என்ற வார்த்தை, மிகவும் மேன்மை வாய்ந்ததாக இருந்தது. நமது சொந்த நாட்களில் போன்றே, பவுலின் நாட்களிலும், ஸ்தானாபதி என்பவர் தமது தலைவருக்காகப் பேசும் முழு உரிமை கொண்டிருந்தார். அவர் யாரிடம் பேசினாரோ, அவர்கள் அவரது வார்த்தைகள் உண்மையில் அவரை இராஜரீகம் செய்பவரின் வார்த்தைகள் என்று அறிந்தனர். அவர் சமாதானத்திற்காக செயல்பட்ட போது, அவருக்குப் பின்னால், பேரரசின் முழு அதிகாரம் நின்றிருந்தது. இவ்வாறாகப் பவுல், தேவனுடைய "சமாதானத்தை" ஏற்றுக்கொள்ளும்படி மற்றவர்களிடம் அறிவித்தபோது, அது

*தேவன் தமது ஊழியக்காரர் மூலமாக அறிவித்ததாகவே இருக்கிறது.*

## முடிவுரை

*சபை ஊழியத்தின் கவனக்குவிப்பு பெரிதும் விவாதிக்கப்பட்டிருந்த காலத்தில் பேசப்பட்ட பவுலின் வார்த்தைகள், இன்றைய நாட்களில் கேட்கப்பட வேண்டும். நமது திட்டங்களுக்கான இலக்கு மற்றும் நோக்கம் ஆகியவற்றிற்காக நாம் கண்ணோக்கும் இடங்கள் யாவற்றிலும், தேவனுடைய "ஒப்புரவாக்குதலின் வசனம்" அவரது ஊழியக்காரர்களிடத்தில் ஒப்புவிக்கப்பட்டுள்ளது என்ற அத்தியாவசியமான உண்மையைக் கண்ணோக்காதிருக்க நாம் துணியாதிருப் போமாக. சபையானது, மற்றவர்களிடம், "தேவனிடத்தில் ஒப்புரவாகுங்கள்" என்று கூறுவதற்காகவே அது உள்ளது என்பதை அது மறக்கிறபோது, சபையானது தனது வழியை இழந்து நிற்கிறது. ஒரு "உண்மையான சபை" என்பது, தன்னை ஜீவனுக்கென்று அழைத்த ஒரு எளிய வரலாற்றினிடம் திரும்பத் திரும்ப வருவதாக உள்ளது: "எல்லாருக்காகவும் ஒருவரே மரித்திருக்க, எல்லாரும் மரித்தார்கள்." நாம், "மனிதக் கண்ணோட்டக் கருத்தில்" இருந்து மாத்திரம் பேசி மற்றும் செயல்பட்டால், நமது இருப்பிற்கான நோக்கத்தை நாம் இழந்துபோகிறோம். ஒருவேளை, நாம் "மனிதக் கண்ணோட்டத்தின்படி" வெற்றிநிறைந்தவராக இருந்தும் நமது வழியை இழந்துபோகலாம். ஒவ்வொரு தலைமுறையிலும் கேட்க வேண்டிய அவசரமான ஆணையொன்றுள்ளது: நமது ஊழியமானது தேவனுடைய மதிப்புகளின் "புதிய உலகின்" பிரதிபலிப்பாக உள்ளதா?*

---

குறிப்புகள்

[1]Richard John Neuhaus, *Freedom for Ministry* (New York: Harper, 1979), 35. [2]Verner Eller, *Outward Bound* (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans, 1930), 47.